
# ஆத்ம ஜோதி

14-1-70




ஆத்மஜோதி நிலயம், நாவலப்பிட்டி, இலங்கை.




ஓர் ஆத்மீக மாத வெளியீடு


எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே. - சுத்தானந்தர்


ஜோதி 22 | சௌமிய ஸ்ரீ தை மீ 1ம௳ [14-1-70] | சுடர் 3


# பொருளடக்கம்


சங்கூதுவோம் 65
காந்திஜியின் கருத்துக்கள் 66
மகாத்மாகாந்தியும் சர்வோதயமும் 67
அப்பர் அருளமுதம் 74
கச்சியப்பர் கண்ட காட்சி 79
உள்ளம் உறங்காதோ 81
இயற்கையே சோதிடம் 83
விபூதி 85
சத்தியசீலர் பாபுஜீ 89
கந்த ஷஷ்டி 91
நாம் யார்? 94




## ஆத்மஜோதி சந்தா விபரம்


ஆயுள் சந்தா 100-00
வருட சந்தா 5-00
தனிப்பிரதி சதம் 50

கௌரவ ஆசிரியர் திரு. க. இராமச்சந்திரா
பதிப்பாசிரியர் திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி· போன்: 353

# சங்கூதுவோம்

(நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை)

சத்தியம் நிலைக்கு மென்று சங்கூதுவோம்
சாந்தமே செலிக்கு மென்று சங்கூதுவோம்
நித்தியம் கடவுளென்று சங்கூதுவோம்
நீர்க்குமிழாம் வாழ்க்கை யென்று சங்கூதுவோம்

****

நீதியே நிலைக்கு மென்று சங்கூதுவோம்
நியாயமே செலிக்கு மென்று சங்கூதுவோம்
வாது சூது பொய்மை யாவும் ஒன்றோ டொன்றாய்
வம்பு கொண்டு மறையு மென்று சங்கூதுவோம்

****

புண்ணியம் பலிக்கு மென்று சங்கூதுவோம்
பொறுமையே பலிக்கு மென்று சங்கூதுவோம்
மண்ணிற் செய்த நன்மை தீமை யல்லாமலே
மற்ற தொன்றும் மிச்சமில்லை என்றூதுவோம்

****

தருமமே நிலைக்கு மென்று சங்கூதுவோம்
தானமே தழைக்கு மென்று சங்கூதுவோம்
கருமமே சிறக்கு மென்று சங்கூதுவோம்
கடவுளுண்மை வடிவ மென்று சங்கூதுவோம்

****

சாந்தி சாந்தி சாந்தி யென்று சங்கூதுவோம்
சாத்திரங்கள் முடிவிதென்று சங்கூதுவோம்
காந்தி காந்தி காந்தி யென்று நம்நாட்டிலே
கால் நடக்கும் வேத மென்று சங்கூதுவோம்.

**
**

# காந்திஜியின் கருத்துக்கள்

## கண்ணுக்குத் தெரியாத சக்தி

விவரிக்க முடியாத மர்மமான ஒரு சக்தி, எல்லாப் பொருட்களிலும் வியாபித்து நிற்கின்றது. அந்தச் சக்தியை நான் பார்க்க முடியாவிட்டாலும் அதை நான் உணருகிறேன். கண்ணுக்குத் தெரியாத இந்தச் சக்தி தன்னை எவரும் உணர்ந்து கொள்ளும்படி செய்கிறது. எனினும் அதை நிரூபித்துக் காட்ட அது எவ்விதத்திலும் இடம் கொடுப்பதில்லை. ஏனெனில், நான் எனது புலன்களின் மூலம் அறியும் எல்லாப் பொருள்களையும் போல் அது இல்லை. அது புலன்களுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. இருந்தாலும் கடவுள் இருப்பதை ஒரு எல்லைக்கு உட்பட்டு பகுத்தறிவைக் கொண்டு வாதிப்பது சாத்தியமேயாகும்.

## வழிகாட்ட வரும் தெய்வம்

வானம் முழுவதும் ஆழ்ந்த அந்தகாரம் சூழ்ந்து கொண்டிருக்கும் போதுதான் பெரும்பாலுந் தெய்வம் வழிகாட்ட வருகின்றது.

## அவரே அன்பு

இந்த சக்தி நன்மை விளைவிப்பதா அல்லது தீமை விளைவிப்பதா? அது கலப்பற்ற நன்மை விளைவிப்பது என்பதையே நான் காண்கின்றேன். ஏனெனில் மரணத்திற்கிடையே உயிர் நிலைத்திருப்பதையும், பொய்மைக்கு இடையே சத்தியம் நிலைத்திருப்பதையும், ஒளிக்கிடையே இருள் நிலைத்திருப்பதையும், இருளுக்கிடையே ஒளி நிலைத்திருப்பதையும் நான் பார்க்க முடிகின்றது. கடவுளே அன்பு, அவரே நலன்களுக்கெல்லாம் மேலான நலன்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# மகாத்மாகாந்தியும் சர்வோதயமும்

—(ஆசிரியர்)—

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சர்வோதயம் என்பது அஹிம்சா ஜனசக்தியை ஆதாரமாகக் கொண்டது. ஆதலால் தண்ட சக்தியின் சின்னமான எந்த அரசியல் அதிகாரத்திற்கும் புறம்பானது சர்வோதயம்.

தென்னுபிரிக்காவில் காந்தியடிகளின் ஒரு பிரயாணத்தின்போது, அவரது நண்பர் 'போலக்' என்பவர் 'ரஸ்கின்' என்ற மேனுட்டறிஞரின் நூல் ஒன்றைக் காந்தியடிகளிடம் கொடுத்தார். காந்தியடிகள் இருபத்துநான்கு மணித்தியாலப் பிரயாணத்தில் அப்புத்தகத்தைக் கீழே வைக்காமலே வாசித்து முடித்தார். காரணம் அந்நூலின் கொள்கை காந்தியடிகளின் மனதைக் கவர்ந்ததாகும்.

''எல்லா மக்களும் வேறுபாடின்றி இன்ப வாழ்வு வாழ வேண்டும்; கடையருக்குங்கூட கடைத்தேற வழி செய்ய வேண்டும்'' என்ற இயேசுநாதரின் உபதேசத்திற்கு விரிவுரையாக அமைந்தது போன்று ரஸ்கினின் நூல் விளங்கியது, நூலின் பெயர் ''கடையனுக்கும் கடைத்தேற்றம்'' என்பதாகும். இந்நூல் மகாத்மாவின் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. மகாத்மாவின் வாழ்க்கையில் பல திருப்பு மையங்கள் ஏற்பட்டாலும் இந்த நூல் முக்கிய திருப்பு மையமாகும்.

இந் நூலின் கொள்கையில் மகாத்மா தனது உள்ளத்தைப் பறிகொடுத்தார். இதன் காரணமாக முதன் முதலில் வக்கீல் தொழிலே உதறித் தள்ளினுர். அடுத்தபடியாகத் தனது சொந்தப் பொருளேக் கொண்டே டர்பன் நக

ருக்கருகில், ரஷ்யஞானி 'டால்ஸ்டாய்' பெயரை வைத்து 'டால்ஸ்டாய் பண்ணை' என்னும் ஆச்சிரமத்தை நிறுவினார். அந்நூலின் சாரத்திற்குக் காந்தி அடிகள் 'சர்வோதயம்' எனப் பெயரிட்டார்.

சாதாரணமாக மக்களில் பெரும்பாலோர் உடல் நலமும் பணவசதியுமே வாழ்க்கை நலமெனக் கொள்கிறார்கள். இத்தகைய நலத்தைப் பெறுவதில் அறநெறி மீறப்படுமானல் அதை மிகுந்த தவருக அவர்கள் கருதுவதில்லை பெரும்பான்மையோருக்கு நலந்தரும் முயற்சியின் பயனுகச் சிறுபான்மையோருக்குத் துன்பம் நேருமாயினும் அதில் தவறில்லை என்றும் அவர்கள் எண்ணுகிருர்கள். ஆகவே வாழ்க்கையில் நீதி வழுவாத சத்தியமும் ஒருவருக்குந் துன்பத்தை விளைவிக்காத அஹிம்சையும் சர்வோதயத்தின் ஆதாரம்.

காந்தியடிகள் பிறருக்கு உபதேசித்துத் தானும் வாழ்ந்து காட்டிய தத்துவம் சர்வோதயம் ஆகும். சர்வோதய தத்துவம் என்பது எல்லாவிதமான சாதி, சமய, இனத்தவர்களுக்கும் பொதுவானது. உலகம் ஒரு குடும்பம் என்பதைச் சர்வோதய தத்துவ மூலமே உணர்த்த முடியும். எவ்விதத்திலும் வேற்றுமையோ, ஏற்றத்தாழ்வோ, ஆதிக்கமோ சுரண்டலோ இன்றி உடலுழைப்பை ஆதாரமாகக் கொண்ட சமதர்ம சமுதாயம் சர்வோதய சமுதாயமாகும்.

தேவைக்கதிகமான பொருளை ஒருவன் தன்னிடத்தில் வைத்திருத்தல் சர்வோதய தத்துவத்தின்படி களவான பொருளாகும். ஒரு கிராமம் தன்னிறைவைப் பெறும் இலக்கை நோக்கி முன்னேறுதல் சர்வோதயமாகும். சர்வோதயம் என்ற வார்த்தையின் பொருள் பூரண வாழ்வின் உதயம் என்பதாகும். நீதிவழுவா நெறியினுலேயே மனித சமுதாயம் இன்பம் அடைய இயலும் என்பது மகாத்மாவின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

இக்காலத்தில் நாம் எத்தனையோ விஷயங்களில் மேனாட்டவரைப் போல் நடிக்கிறோம். உடையில் மேனாட்டாரைப் பின்பற்றுகிறோம். ஆனால் நேரத்திற்கு எதனையும் செய்யக் கற்றுக்கொள்வதில்லை. மேனாட்டாரின் நடவடிக்கைகளிற் பலவற்றை நாம் பின்பற்ற வேண்டியது அவசியமே யாயினும் அவ்விடத்திய பழக்கங்கள் பலவற்றினால் தீமையே விளையும் என்பதில் ஐயமில்லை. இத்தகையவைகளைக் கண்டிப்பாக நாம் அகற்றியே யாகவேண்டும்.

நாம் பணம் தேடுவதற்காக வெளிநாடுகளுக்குப் போகிறோம். பணமோகத்தில் நீதியையுங் கடவுளையும் மறந்து சுயநலத்தில் ஆழ்ந்து விடுகின்றோம். இதனால் வெளிநாட்டுக்குச் சென்றதனால் நமக்கு நன்மை ஏற்படுவதற்குப் பதிலாகப் பெருந்தீமை உண்டாகிறது. இல்லா விட்டாலும் வெளிநாட்டு யாத்திரையின் முழுப்பயனும் கிட்டாமற் போகிறது. எல்லா மதங்களிலுமே நியாயத்தின் அமிசம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் சாதாரண அறிவினால் பார்த்தாலும் நமக்கு நீதியினின்று வழுவாது நடத்தல் அவசியமென்பது தெரியவரும். இன்பம் அடங்கியிருப்பது இதில்தான் என்பது ஜான்ரஸ்கின் கண்ட உண்மை. அவர் மேலை நாட்டவரின் கண்ணைத் திறந்துவிட்டதனால் இன்று ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும்கூட எத்தனையோபேர் அவரது அறிவுரைகளின்படி நடக்கிறார்கள்.

மனிதன் செய்ய வேண்டியது என்னவென்பதை சோக்ரதர் சுருக்கமாய்க் கூறினார். அவர் சொன்னதையே ரஸ்கின் விரிவாய் விளக்கியிருக்கிறார். சோக்ரதர் கூறிய சூத்திரத்திற்கு ரஸ்கின் விரிவுரை வரைந்திருப்பதாய்க் கூறலாம்.

காந்தியடிகள் சர்வோதயம் பற்றித் தமது சத்திய சோதனையில் கூறியதாவது;-

1. தனிமனிதனுடைய நலம் பொது நலத்துள் அடங்கும்
2. எல்லோருக்குமே தம் உழைப்பின் மூலமாக வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைச் சம்பாதித்துக்கொள்

வதற்குச் சம உரிமை உண்டாகையால் ஒரு வழக்கறிஞரின் வேலைக்கு எவ்வளவு மதிப்பு உண்டோ அவ்வளவு ஒரு நாவிதரின் வேலைக்குண்டு.

3. விவசாயி அல்லது கைத்தொழிலாளியின் வாழ்க்கை போன்ற உழைப்புள்ள வாழ்க்கையே மனிதர் ஒவ்வொருவரும் வாழவேண்டிய வாழ்க்கையாகும். இவற்றுள் முதலாவது எனக்குத் தெரிந்ததே. இரண்டாவதை நான் சுமாராக உணர்ந்திருந்தேன். மூன்றாவதோ எனக்குத் தோன்றியதே யில்லை. இரண்டாவதும் மூன்றாவதும் முதலாவதிலேயே அடங்குமென்பதை ரஸ்கின் நூல் வெட்டவெளிச்ச மாக்கியது.

1947 ஆகஸ்ட் 15ம் நாள் ஆங்கிலேயர் பாரத தேசத்தை துண்டாக்கி இரண்டு துண்டுகளுக்கும் அரசியல் சுதந்திரம் அளித்தார்கள். காந்தியடிகள் தாம் மறைவதற்குச் சின்னாட்களுக்கு முன்பு வர்தாவில் நிர்மாண ஊழியர்களைக் கூட்டி அனைவரும் உய்யும் சூழ்நிலையையும் அரசியல் சுதந்திரத்தால் சாதிக்கவேண்டிய காரியங்களையும் வகுக்க இருந்தார். ஆனால் இறைவன் திருவுளம் வேறாக இருந்தது.

காந்தியடிகளின் மறைவுக்குப்பின் காந்தீயத் தொண்டர்கள் ஒன்று கூடினார்கள். அம்மகாநாட்டில் கலந்து கொண்ட வினோபா அடிகள் அனைவரும் உய்யத் தொண்டினை ஏற்கும் ஒரு தொண்டர் குழாத்தையும் நிறுவும் பிரேரணையைக் கொணர்ந்தார். உண்மை, அஹிம்சை, என்பவைகளைச் சாதனங்களாகக் கொண்டு அனைவரும் உய்யும் வழிகளில் தொண்டாற்ற விரதம் பூணுபவர்களின் சகோதரத்துவமென அதை அவர் விளக்கினார். அது ஓர் ஆதர்சத்தை ஏற்கும் கூட்டமாக நின்றதன்றி ஓர் அமைப்பாக நிறுவப்படவில்லை. அத்தொண்டர்களை ஒன்று கூட்டுவிக்க ஒரு நிர்வாக சமிதியும் உண்டாக்கப்பட்டது. அடுத்த மார்ச்சில் இந்தூருக்கருகாமையில் ராவ் என்ற இடத்தில் சர்வோதய மகாநாடு கூடிற்று. அச்சமயம் சர்வசேவா

சங்கம் நிறுவப்பட்டது. அதில் நிர்மாண அமைப்புக்கான கதர்ச் சங்கம், ஆதாரக் கல்விச் சங்கம், கிராமக் கைத்தொழில் சங்கம், கோசேவா சங்கம், ஹரிஜனசேவா சங்கம், ஆகிய பலவும் இணைவதென முடிவு செய்யப்பட்டது.

மாகாணந்தோறும் காந்தியடிகளின் நிர்மாண வேலையில் நம்பிக்கை கொண்டவர்கள் சமாஜத்தின் தொண்டர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டார்கள். அரசியல் ஆதிக்கத்தால் அரசாங்கச் சிப்பந்திகளைக் கொண்டு நிர்மாண வேலைகளைச் செய்வதினும் தாமே நேரடியாக அவைகளை ஏற்பதே தொண்டர்களுக்கு முறையாயிற்று. அரசாங்க உதவி கிட்டினாலும் கிட்டாவிட்டாலும் தம் தொண்டைத் தாம் செய்து கொண்டு அவர்கள் முன் செல்வது வழியாயிற்று. ஜனநாயக ரீதியில் சமத்துவம் பேசப்படுவதைப் போன்று அதை நிலைநிறுத்துவது சாத்தியம் அன்று என்பதும் அறியப்பட்டது.

இந்தியாவிற்குச் சுயராஜ்யம் ஏற்பட்டாலும் கிராமங்களுக்குச் சுயராஜ்யம் ஏற்படவில்லை என்பது வினோபாஜியின் கருத்தாகும். நாடு சுதந்திரம் அடைந்தாலும் பொருளாதார சுதந்திரம் இன்னும் ஏற்படவில்லை. ஆங்கிலேயர் அரசியல் ஆதிக்கத்தை விட்டாலும் பொருளாதிக்கத்தை விடவில்லை. அமெரிக்கர்களும் அது, இது சொல்லிக்கொண்டு பொருளாதிக்கத்தை நிலைநாட்டி வந்தார்கள்.

வினோபாஜீ கிராமந்தோறும் கால் நடையாகச்சென்று கிராம ராஜ்யத்தைப்பற்றி உபதேசம் செய்யலானார். அடிகளார் தொழிலின் மகத்துவத்தையும் அன்பு அஹிம்சையையும் பற்றி பிரார்த்தனைக் கூட்டத்திலேயே கிராமங்களுக்கு உபதேசம் செய்து வந்தார்.

பலகோடி மக்களை ஒரு கேந்திர ஸ்தானத்திலிருந்து ஆளுதலும், மனிதன் தன் வாழ்க்கைத் தேவைகளை தானாகத் தயாரித்துக் கொள்ளாமல் பிறரிடமிருந்தும், பிறநாடுகளிடமிருந்தும் பெறுதலும், அவ்வழி சிலரிடம் பண்டங்

கள் மிகுதலும், பலரிடம் அவையில்லாதிருத்தலும், இன்றைய சமூகச் சீர்கேட்டிற்குக் காரணம் என்பது மக்களுக்குப் புலனுகிறது. பெரும் போட்டி உற்பத்திமுறை, உலக வியாபாரம், இலாபம், அரசியல் ஆதிக்கம் குடியேற்றம், இவைகளைக் கைவிட்டு தனிநபரும் தனிநாடும் தம் தேவைகளைத் தாமே தயாரித்துக் கொள்ளவும், தன்னடக்கம் பெறவும் வசதியாக நிலைமாறும் பொழுதே தனிமனிதனும் நாடும் உலகமும் அமைதி பெறுதல் கூடுமென்பது உணரப்படுகிறது.

உடலுழைப்பை உதறித்தள்ளுவது பிழை என்பது அறியப்படுகிறது. வாழ்க்கை நிறைவிற்கு பண்டங்களின் குவியலன்று. திறம்பட அவைகளை உண்டாக்கித் துய்த்தலே வழியென்பது ஓரளவுக்கு அறியப்படுகிறது. எளிய வாழ்க்கையும் உயர்ந்த சீலமுமே மனிதனை உய்விக்க வல்லன.

பெரும்பான்மையோர் சிறுபான்மையோர் அரசியல் கட்சி என்ற பேதமற்று, அரசாங்கச் சட்டமும், குவியல் அதிகாரமும் அவசியமில்லாத பரவல் முறையில் வாழ்க்கையின் ஆதாரத் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொண்டு, தனிச் சொத்துரிமையை விடுத்துப் பணத்திற்குப் பதில் உடலுழைப்பைச் செலாவணியாகக் கருதி, அன்பு, அமைதி, கூட்டுறவு முதலியவற்றுடன் அஹிம்சா வழியைப் பின்பற்றும் கிராம ராச்சியங்களால் இணைக்கப்பட்ட தேசீய சமுதாய வாழ்க்கையே சர்வோதய வாழ்க்கை என்று கூறப்படுகிறது. இந்த வாழ்க்கையே உலகத்தில் சாந்தியை நிலைநாட்டக் கூடியது.

வினேபாஜீ வார்தாவை நோக்கித் தொடங்கிய கால்நடை யாத்திரை கம்யூனிஷ்டு வட்டாரம் வழியாக அமைந்திருந்தது. 15–4–1951 ஆம் ஆண்டு ஸ்ரீராம நவமியன்று வினேபா அடிகள் தெலுங்கான யாத்திரையை ஆரம்பித்தார்கள். அங்குள்ள மக்கள் ஏகோபித்த மனதுடன் எங்களுக்கு வேண்டியது நிலம் ஒன்றே. நிலம் தாருங்கள் நாங்கள் பாடுபட்டுழைக்கின்றோம் என்றார்கள். அங்குதான்

பூதான இயக்கம் உதித்தது. கடந்த 19 ஆண்டுகளாக பாரத தேசத்தில் சரித்திரம் காணாத ஒரு இயக்கம் நடந்துவருகிறது. இது உலகத்திற்கே ஒரு புதுமை. மனித சமுதாயத்திற்கே ஒரு புதுக்காட்சியும் அனுபவமுமாகும். இது அஹிம்சையின் சிகரம். இது ஒரு யுகப் புரட்சி என்றே பிற தேசத்தினர் வியப்படைகின்றார்கள்.

உலக ஆரம்ப முதல் நிலத்தின் பேரால் தேசங்களிடையே எவ்வளவு யுத்தங்கள் நடந்தன? எவ்வளவு மனித ரத்தம் சிந்தப்பட்டு ஆறாக ஓடிற்று. இவைகளைச் சரித்திரத்தில் காண்கிறோம். தனிமனிதர்களிடையே நில உரிமைக்காக எவ்வளவு சச்சரவுகள் சண்டைகள், கொலைகள் நடந்தன! இவற்றிற்கு நீதிமன்றங்களே சாட்சிகள்.

நிலப்பிரச்சினை பற்றி உலகத்தில் எவ்வளவு மேதைகள் ஆராய்ச்சி செய்தனர்! சமூக ஏற்றத் தாழ்வுக்கும் வறுமைக்கும் ஆதிக்கத்திற்கும் சண்டைகளுக்கும் அமைதியற்ற வாழ்க்கைக்கும் நிலப்பிரச்சினை எவ்வளவு காரணமாயிருந்தது என்று எடுத்துக்காட்டும் மேதைகளின் ஆராய்ச்சி நூல்கள்தான் எவ்வளவு! ஆனால் செயல் முறையில் நிரந்தர அமைதியைக் கொடுக்கக் கூடிய முடிவு நிலப்பிரச்சினைக்கு ஏற்பட்டபாடில்லை.

ஹரிஜன விவசாயிகள் 80 ஏக்கர் நிலம் கேட்டனர். வினோபாஜீ ஆழ்ந்து சிந்தித்தார். கூட்டத்தில் இருந்த ஒருவர் நூறு ஏக்கர் நிலம் நான் தருகிறேன் என்றார். இந்தப் பெருமையை முதன் முதல் தேடிக்கொண்ட பெருமை இராமச்சந்திர ரெட்டியாருக் குரியதாகும். மக்களுடைய எல்லாத் துறைகளிலும் சர்வோதயம் புகுந்து மக்கள் வாழ்க்கையில் புதுமையை ஏற்படுத்தி வருவதை இன்று இந்தியாவில் உள்ள கிராமங்களில் பார்க்கிறோம். இதை உலகத்தில் எல்லாத் தேசங்களிலும் கொள்கை யளவில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். சர்வோதயமே சர்வத்திற்கும் வழிகாட்டியாகும்.

# அப்பர் அருளமுதம் - 3

## தீ நெறிக்கே சேர்கின்றார் யார்?

(முத்து)

அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன் னானை
அகத்தியனை யுகப்பானை அயன்மால் தேட
நின்றானைக் கிடந்தகடல் நஞ்சுண் டானை
நேரிழையைக் கலந்திருந்தே புலன்க ளைந்தும்
வென்றானை மீயச்சூர் மேவி னானை
மெல்லியலாள் தவத்தினிறை யளக்க லுற்றுச்
சென்றானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீ நெறிக்கே சேர்கின் றாரே.

அப்பர் சுவாமிகள் இத்திருத்தாண்டகத்தில் இரு பெருந் தலங்களைக் குறிப்பிடுவதோடு கந்தபுராணத்தின் கருவூலத்தையும் தெளியவைக்கின்றார். திருமீயச்சூர், திருவீழிமிழலை என்பன அவர்குறிப்பிட்ட தலங்களாகும்.

திருமீயச்சூர், மாயூரம் பேரளம் ரயில் பாதையில், பேரளம் ரயில் நிலையத்திற்கு மேற்கே சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் இருக்கின்றது. இது காவிரித் தென்கரையிலுள்ள ஐம்பத்து மூன்றாவது தலம். இறைவர் திருப் பெயர்; முயற்சிநாதர். இறைவி திருப்பெயர் சுந்தரநாயகி. சூரியன் வழிபட்டுப் பேறு எய்திய தலமாகும்.

திருவீழிமிழலை, காத்தியாயன மகரிஷியின் யாகத்தில் தோன்றிய உமாதேவியாரைத் திருமணம் செய்துகொண்டு இறைவன் என்றும் மணக்கோலத்தோடு இருக்கும் தலம். திருமால் சக்கரம் பெறும் பொருட்டு, நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூவைக் கொண்டு அர்ச்சிக்க, ஒருநாள் ஒரு மலர் குறைய, அதற்காகத் தமது தாமரை மலர்போன்ற கண்ணைப் பிடுங்கி அர்ச்சித்துச் சக்கரம் பெற்றதலம். திருநாவுக்கரசு சுவாமிகளும் திருஞான சம்பந்த சுவாமிகளும்

படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கிய தலம். இத்தலத்து வடக்கு வீதியில் அப்பர் சம்பந்தர் திருமடங்கள் தனித்தனியே இருக்கின்றன. சுவாமி பெயர்; நேத்திரார்ப்பணேசர். அல்லது வீழியழகர். அம்மை பெயர்; சுந்தரகுசாம்பிகை.

சனகர் முதலான நால்வரும் நான்குவேதம் ஆறங்கம், இருபத்தெட்டு ஆகமங்கள், பதினெண்புராணங்கள் யாவும் கற்றவர்கள். அவர்களைவிட யாரும் கற்றுத் தேர்ந்தவர்கள் இல்லையெனும்படி முதன்மையாகக் கற்றவர்கள். இத்தனை கற்றும் உள்ளத்தெளிவு ஏற்படவில்லை. அதனால் மனங்கலங்கிச் சிவபிரானிடம் சென்றனர். சிவபிரான் நால்வரையும் அழைத்துக் கொண்டு கல்லால விருட்ச நீழலின் கண் தெற்கு நோக்கி அமர்ந்தார். நால்வரும் எம்பிரானைப் பார்த்த வண்ணம் வடக்கு நோக்கி அமர்ந்தனர். எம்பெருமான் சின்முத்திரையைப் பிடித்தவண்ணம் சீடர்களைப் பார்த்தார். நால்வரும் அவ்வண்ணமே இருந்து மௌனிகளாயினர். தட்சணாமூர்த்தி நால்வருக்கும் சித்தாந்த நெறியை சொல்லாமல் சொல்லி அருளினார். சீடர்களும் புத்திசாலிகளான படியினால் மௌனோபதேசத்தைப் புரிந்து கொண்டார்கள். இதனை அப்பர் சுவாமிகள்

'அன்றாலின் கீழிருந்தங் கறஞ்சொன் னானை'

எனக்குறிப்பிடுகின்றார்.

சிவபெருமான் இமயமலை யரசனுடைய புத்திரியாகிய பார்வதிதேவியைத் திருமணம் செய்வதாகச் சப்தரிஷிகளும் நிச்சயித்துக் கொண்டனர். இமயமலை யரசன் சென்று எம்பெருமானை அழைத்தான். முனிவர்களும் தேவர்களும் மூவர்களும் தத்தம் பரிசனருடன் இமயத்தில் ஒன்று கூடினர். அதனால் வடக்குத் தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. அதனைச் சமப்படுத்துவதற்காக எம்பெருமான் அகத்தியரை அழைத்துத் தென் திசை செல் என்றார். எம்பெருமானின் திருமணக் காட்சியைக் காணத் துடித்துக் கொண்டிருக்கும் அகத்தியரின் மனம் பேதலித்தது. உனக்கு அங்கு திரு

மணக்காட்சி கிடைக்கும் என்ருர் பகவான். உடனே அகத்தியர் தென்திசை நோக்கிப் புறப்பட்டுவிட்டார். அகத்தியருக்கு எம்பெருமானின் திருமணக்காட்சி கிடைத்ததோடு முருகப் பெருமானின் தமிழுபதேசமும் கிடைத்தது. அத்தனை பேருக்குள்ளும் அகத்தியரைத் தெரிந்தெடுத்துத் தென்னுட்டுக்கு எம்பெருமான் அனுப்பினுரென்ருல் அகத்தியரின் பெருமையும் அகத்தியர்மேல் கொண்டிருந்த அன்பும் புலனுகின்றது. இதனை அப்பரடிகள்

'அகத்தியனை யுகப்பானை' என்கின்ருர்.

பிரமதேவர் இறைவனுருத்தரவுப்படி படைப்புத் தொழிலை மேற்கொண்டார். படைப்புத் தொழில் ஒழுங்காக நடைபெற்றது. நான் படைக்கிறேன் என்ற எண்ணம் பிரமாவுக் குண்டாயது. தனது படைப்பின் அழகை அனுபவிக்கப் பிரமதேவர் தனியாகப் புறப்பட்டார். திருப்பாற்கடலில் திருமால் பள்ளி கொள்ளுவதைக் கண்ணுற்றுத் தடுமாறினுர். இது எனது படைப்பல்லவே என்று மயங்கினுர். தன்னைப் படைத்தவனையே மறந்து விட்டார். பிரமா தந்தையையே மறந்துவிட்டார் என்ருல் அவரது படைப்பிலுள்ள ஜீவர்கள் தமது தந்தையை மறப்பதில் என்ன ஆச்சரியம் உண்டு? இருவருக்கும் இடையில் விவாதம் முற்றிச் சண்டையில் முடிந்தது. சண்டை பல யுகம் நடந்தது. ஈற்றில் ஆதியும் அந்தமும் இல்லாத எம்பெருமான் சோதிப் பிழம்பாகக் காட்சி கொடுத்தான். இருவராலும் உணர முடியவில்லை. இருவரிடமுமுள்ள அகங்காரம் அழியவில்லை. அதனுல் மயங்கினர். இறைவனது அடியையும் முடியையும் தேடினர். அகங்காரம் அழிந்து திரும்பினர். எம்பெருமானுடைய காட்சி கிடைத்தது. இதனை அப்பரடிகள்

'அயன் மால் தேட நின்ருனை' எனக் குறிப்பிடுகின்ருர்.

தேவர்களும் அசுரர்களும் சேர்ந்து திருப்பாற்கடல் கடைந்தனர். அமிர்தத்திற்குப் பதிலாக ஆலகால விஷம் பொங்கி வந்தது. எல்லாரும் ஓடிச்சென்று சிவபெருமானி

டம் சரண் புகுந்தனர். அதன் வெப்பத்தை யாருந்தாங்க முடியாது. எம்பெருமான் கைகளால் எடுத்து தமது வாயி லே போட்டுக் கொண்டார். தேவி பயத்தினால் பெருமா னுரின் கழுத்தை இறுகப்பிடித்தாள். விடம் அங்கேயே தங் கிக் கண்டம் கறுத்தது. அதனால் எம்பெருமான் நீலகண் டன் எனப் பெயர் பெற்றார். எம்பெருமானுடைய இச்செ யல் குழந்தைக்காகத் தான் பத்தியம் சாப்பிடும் தாயின் கருணையை யல்லவா காட்டுகின்றது. என்னே எம்பெரு மானின் தியாகம். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய எம்பெருமானின் இச்செயலை அப்பரடிகள்

'கிடந்த கடல் நஞ்சுண்டானை' எனக்குறிப்பிடுகின்றார்.

எம்பெருமானாகிய சிவபெருமான் அர்த்தநாரீச்சுரன் என்றும், மாதொருபாகன் என்றும் உமாமகேசுரன் என் றும் இப்படிப் பலவாறாக அழைக்கப்படுகின்றார். பாதி ஆண் உருவும் பாதி பெண் உருவுமாக அமைந்தவன். இடப்பா கத்தை உமைக்காகவும் சிரசைக் கங்கைக்காகவும் அளித்த வன். ஆன்ம கோடிகட்கெல்லாம் போகம் அமைதல் வேண் டிப் போக வடிவம் கொண்டு போகிபோல நிற்கின்றான். அதே நேரத்தில் ஐம்புலன்களையும் வென்ற யோகிகளுக்கெல் லாம் யோகியாகவும் விளங்குகின்றான். இதனை அப்பரடிகள்

'நேரிழையைக் கலந்திருந்தே புலன்களைந்தும் வென்றானை'
எனக் குறிப்பிடுகின்றார்.

கோடி சூரியர்கள் ஒன்று சேர்ந்தாலும் இறைவனது பேரொளிப் பிழம்பிற்கு ஈடாகா. திருமீயச்சூர்ப் பெருமா னாகிய முயற்சி நாதரைச் சூரியன் இடைவிடா முயற்சி யினால் வழிபட்டு உயர்ந்த பேறு பெற்ற செய்தியை அப்ப ரடிகள்

'மீயச் சூர்மேவினானை' எனக் குறிப்பிடுகின்றார்.

தக்கனுக்கு மகளாகத் தேவி இருந்த காலத்தில் தக் கன் அகங்காரத்தினால் சிவ அபராதம் செய்தான். அதனைப்

பொறுக்க மாட்டாத தேவி தக்கனுக்குமகளாக இருப்பதை விரும்பாது எம்பெருமானிடம் வேண்டினுள். எம்பெருமான் திருவுளப்படி தேவி இமயமலை யரசன் மகளாக அவதரித்து எம்பெருமானை அடையக் கடுந்தபசு செய்தாள். தேவியின் கடுந்தபசு கண்டு தேவிக்கு கருணைபாலிக்க எம்பெருமான் முதியவர் வேடங் கொண்டு வந்தார். தேவியின் தவத்திற்கு மகிழ்ந்த பெருமான் விடை மீது காட்சி கொடுத்துத் திருமணத்திற்கு இசைந்தருளினுர். இதனை அப்படிகள்

'மெல்லியலாள் தவத்தினிறை யளக்கலுற்றுச் சென்றுனை'
என்க் குறிப்பிடுகின்றுர்.

உயிர்களுக்கு நாளும் போகம் ஊட்ட விரும்பிய பரமன் திருவீழிமிழலையில் திருமணவாளக் கோலத்துடனே காட்சிதருகின்றுன். இதனை அப்பரடிகள்

'திருவீழிமிழலை யானை' எனக்குறிப்பிடுகின்றுர்.

இத்தகைய பெருமானைச் சேராதவர்கள் தீய நெறிகளிலே சென்று உழலுகின்றுர்கள் என்பது அப்பரடிகளுடைய கருத்தாகும். இறைவனது இத்தகைய பெருமைகளை அறிந்திருந்தும் இறைவனை அடைய முயலாதவர் தீநெறிக்கே தமது வாழ்க்கையை சேர்த்துக் கொண்டவராவார்.

★★

## தீமையுடன் மற்போர்

கடவுளிடத்தில் தீமை என்பதே கிடையாது என்பதை நான் அறிவேன். என்றுலும், உலகில் தீமை இருக்கின்றதெனில், அதற்குக் காரணகர்த்தா அவர்தான். ஆனல் தீமை அவரைத் தொடுவதில்லை. உயிர் போவதாக இருந்தாலும் கூட தீமையை எதிர்த்தும், தீமையுடனும் நான் மற்போர் செய்யாவிடில், நான் ஒருகாலத்திலும் கடவுளை அறியமுடியாது என்பதையும் அறிவேன். —காந்தி

# கச்சியப்பர் கண்ட காட்சி - 15

—ஏழாலை சிற்றம்பலம் முருகவேள்—

இவ்வாருக பிறந்த அசுரக் குழந்தைகளை முன்னே இருத்தி, காசிபனுகிய தந்தை தானே ஓர் உபதேசம் செய்பலுற்ருன்:

'நல்லவர்களால் ஆராயத் தக்க மூன்று பொருள்கள் உள. பதி ஒன்று; வான் திகழ் தளை மற்றது; மூன்ருவது, உயிர்த்தொகை. தருமத்தின் வழிநின்று அன்பும் அருளும் பேணி, தவம் செய்தால் உயிர் சிவனைச்சாரும். இது அதற்குக் கதி. எனவே, குழந்தைகளே தவத்தினை இயற்றுங்கள்.'

மாயை இடைமறித்தாள். இடைமறித்து, 'மறைதெரி முனிவனே! நீ உண்மையினையே உபதேசித்தாய். உனது உபதேசம் வீட்டினை விரும்பும் அறிவுடை முனிவர்களுக்கே அல்லாமல் நமது சிறுவர்களுக்குப் பொருந்துமா? செல்வத்தினையும் வெற்றியினையும், இன்பத்தினையும், குறைவிலா ஆயுளினையும், புகழையும் அல்லவோ இவர்கள் அடைய வேண்டும். அவற்றினைப் பெறுகின்ற வழியினை நீ இவர்களுக்கு உபதேசிப்பாயாக!' என்ருள்.

அதற்கு முனிவன், 'இதுவே உனது எண்ணமாளுல் நீயே உபதேசிப்பாய்' என்ருன். மாயையும் வாய்த்தது தருணமென நினைத்து உபதேசம் செய்யலுற்ருள்; 'உங்கள் தந்தை உங்களுக்குச் சொல்லித் தந்ததெல்லாம் உண்மையே. ஆனுல், உங்களுக்காவனவல்ல. உறுதிப் பொருள்கள் கல்வியும் செல்வமுமே. இவ்விரண்டினுள்ளும் செல்வமே சிறப்புடைத்து. கற்றவராயினும் வறுமையுற்ருராளுல், பகைவர் தம்மையும் பணிந்து நிற்பரால், வித்தையினையும், புகழையும், வெற்றியினையும். மேன்மையினையும், தருமத்தினையும் கொடுப்பது செல்வமேயாகும். ஆதலினுல், உங்க

ளால் தேடப்படவேண்டியது செல்வமேயாகும். வடதிசை யில் உள்ள ஆலந்தீவுக்குச் சென்று, குண்டங்கள் அமைத்து, சிவபிரானை நோக்கி வேள்வி புரியுங்கள். புரிந்து திருவெ லாம் பெற முயலுங்கள். உங்கள் வேள்விக்கு வேண்டிய திரவியங்கள் மந்திர தந்திரங்கள் எல்லாவற்றையுமே நா னே பக்கலிலிருந்து உதவுவேன், போங்கள்!!

இவ்வாறு உபதேசம் செய்து, பிரமபுத்திரனுகிய காசி பனைப் பார்த்து, மாயை 'புத்திரரைப் பேண நான் போக, நீ நில்' என்ருள். காசிபன், 'அன்னியனைப்போல என்னை விட்டு நீ செல்லுதல் நீதியோ' என்று கவன்றுரைத்தான். நான் உன்னைச் சேர்ந்தது புத்திரர் பொருட்டேயன்றி, நின்னுடனிருக்கவன்று என்று கூறி மாயவள் மறைந்து போயினுள்.

காசிபன் கவன்று அழுதான். பிரமன் வந்து. 'கள்ளி னும் நஞ்சினும் கொடிது காமம்; அது உள்ளினும் சுட்டி டும்; உணரும் கேள்வியிற் கொள்ளினும் சுட்டிடும்; குறுகி மற்றனைத் தள்ளினும் சுட்டிடும். ஆதலால், அதனுல் அழுங்கல் நீ. தொன்மைபோல் மாதவம் புரிதி' என்ருன். காசிபனும் ஏறமர் கடவுளை இதயத்துன்னி, வினையினீங்கு வான் வீறுெடு நோற்றனன்.

—தொடரும்

# விமோசனம்

ரயிலுக்கு நேரங்கழித்துப் போனுல் ரயில் போய்விடு கின்றது; யாருக்காகவும் காத்து நிற்பதில்லை. சாதாரண ரயில் விஷயமே அதுவானுல், ஆண்டவனுடைய தர்ம சக் கரம் கணநேரங்கூடக் காத்திருக்குமா?

—காந்தி.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

# உள்ளம் உறங்காதோ?

—கொடிகாமம்: எம். பூபாலசிங்கம்.—

உலகில் ஒவ்வொரு மனித உள்ளமும் ஓயாது அலைந்து கொண்டே இருக்கிறது. அதற்கு உறக்கம் இல்லை. அதற்கு அல்லும் பகலும் தொழிலதுவே. அதற்கு உறக்கம் எப்போ! மரணத்தின் பின்னு? உள்ளம் உறங்கினுற்ருன் ஆத்மாவுக்குப் பரிபூரண இன்பம். ஏன் மனித உள்ளங்கள் உறங்குவதில்லை. அதை நாம் சிந்திக்க வேண்டும்.

எனக்கு இரு நண்பர்கள். ஒருவர் வேலாயுதம். மற்றவர் சர்வானந்தம், வேலாயுதம் பரீட்சையில் வெற்றி பெற்றவர். சர்வானந்தம் பரீட்சை முடிவை எதிர்பார்ப்பவர்; அவருக்கு பரீட்சையின் முடிவையிட்டு ஒரு ஏக்கம்; கவலை.

ரதி சர்வானந்தத்தின் தங்கை. இருவருக்கும் எப்பொழுதும் சண்டை. அண்ணன் எப்பொழுதும் அடிப்பான்; தங்கை வாங்குவாள். பின் அழுவாள். இது அவளின் வாழ்வில் இயற்கை.

ஆறுமுகம் ஒரு பெரியவர். அவருக்கு லட்சாதிபதியாக ஆசை. ஒவ்வொரு சுவீப் ரிக்கற்றும் எடுப்பார். ஆனுல், அவருக்கு விழுவதில்லை. இதனுல், அவருக்கு வாழ்வில் ஓர் ஏமாற்றம்.

இவை உதாரணத்துக்காக எடுத்துக் காட்டப்பட்ட மனித உருவங்கள். இவர்களின் வாழ்வின் போக்கைக் காட்டினேம். இத்தகைய மனித உள்ளங்கள் உறங்குமா? உறங்குவதெங்ஙனம்?

மனம் அமைதியின்றிக் கொந்தளித்துக்கொண்டு இருப்பின் அதற்கு உறக்கமேது! உள்ளம்-மனம் உறங்க வேண்டும் அப்பொழுதுதான் மனித ஆத்மன் மகிழும்.

உள்ளம் உறங்குவதென்னபதென்ன? மனம் லயப்படுதல். அதாவது ஒடுங்குதல். மனம் நித்திரையில்தான் ஒடுங்கும் என்றல்ல. அது நடக்கும் போதும் ஒடுங்கலாம்; நிற்கும் போதும் ஒடுங்கலாம். நெப்போலியனும் மன உறக்கத்தை உடையவனே! அதை அவன் கண் விழித்தபடி துயில் கொண்டதைக் கொண்டு அறியலாம்.

மனத்தை லயப்படுத்தல் சுலபமல்ல. அதுவே ஒரு சாதனே. பெரும் யோகிகள், ரிஷிகள் கூடப் பெரும்பாடுபட்டிருக்கின்றனர். மனத்தை லயப் படுத்தின் — உறங்கச் செய்யின், இறை எண்ணம் தலை தூக்கும். தீய எண்ணங்கள் தொலையும், மனிதன் தேவனுவான்.

ஆகவே, எல்லோரும் மனத்தை ஒடுக்கப் பழக்குங்கள்; அதுவே பெரும் சாதனே. மனம் மாடு. அதைப் பிடித்துக் கட்டுங்கள். அது அடங்கி விட்டால் சித்தி, முத்தியெல்லாம் உங்கள் கையிலே!

★★★★

## தீமைக்கும் அனுமதி

உலகில் தீமை இருப்பதற்கு, பகுத்தறிவைக் கொண்ட எந்த முறையைக் கொண்டும் நான் காரணம் கூற முடியவில்லை. அதற்குக் காரணம் கூற விரும்புவது கடவுளுடன் சமத்துவம் கொண்டாடுவதாகும். எனவே, தீமை என்பது இருக்கத்தான் செய்கிறது என்பதை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு எனக்குப் பணிவு உண்டு. கடவுள் நெடுங்காலமாக வேதனையுடனும், பொறுமையுடனும் உலகில் தீமையையும் அனுமதித்து வருகிருர்.

—காந்தி.

# இயற்கையே சோதிடம்

(ச. இ. அப்புத்துரை சோதிடன் வெள்ளவத்தை)

பூமி சுழலும்போது வரும் ஓசை ஒளி உருவம் பவனம் எல்லாம் ஓம்.

தாயாகிய பூமிசாஸ்திரமும் தந்தையாகியவான சாஸ்திரமும் கூடி உதித்த பிள்ளையே சோதிட சாஸ்திரமெனலாம்.

சூரியன் இருக்கும் இராசி முதலாக 12 இராசிகளும் முறையே 2 மணித்தியாலங்களுக்கொரு லக்னமாகக் கிழக்கில் உதயமாகும். இவை பூகோளப் பாகை 30க்கு 2000 மைல்களுக்கு மேம்பட்ட பிரதேசங்களாகும்.

இந்த இரண்டு மணித்தியாலங்களுக்குள்ளும் பிறக்கும் எல்லாப் பிள்ளைகட்கும் ஒரே வித பலனுக இருக்கமாட்டாது. ஏனெனில்? இந்த இரண்டு மணித்தியாலங்களிலும் பூகோளத்தில் 2000 மைல்களுக்குமேலுள்ள பிரதேசங்கள் ஓடிக்கொண்டிருக்கும் போது, எத்தனையோ மலை, ஆறு கடல், குளம் காடு, குடிமனை பட்டினங்களும், மழை, மப்பு மந்தாரம், இடி, மின்னல், பூகம்பம் முதலிய பகுதிகளும் இந்த லக்னத்துள் வருவதால் இதற்குள் பிறக்கும் எல்லாச் சிசுக்களுக்கும் ஒரேவித பலனுக வரமாட்டாது. இதுவே இயற்கையின் தன்மையாகும். (மார்கழி மாத மகத்துவம் 30-12-69) மார்கழி மாதம் 15ந் திகதி சூரியன் உதயமாகும் போது, தனு ராசியிற் 15 பாகை உதய சூரியனுக்குக் கீழ்ப்பாகம், அடிவானத்தில் மறைந்திருக்கும் மிகுதி 15 பாகைகளும் சூரியனுக்கு மேல் வானத்தில் உதயமாயிருக்கும். இதே நேரத்தில் நாமிருக்கும் பூமி சூரியனுக்கு எதிர்ப்பாகத்தில் மேற்கே மிதுனராசி 15 பாகைகள் அஸ்தமனமாயிருக்கும். மிகுதி 15 பாகைகளும் பூமிக்கு மேலே யிருக்கும். ஆகவே, சூரியனுக்கு 7ம் ராசி

யில் பூமியும், பூமிக்கேழாம் ராசியில் சூரியன் இருக்குமென் பதை வாசக நேயர்கள் நெஞ்சில் வைப்பதோடு, மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று பூரணைகாலம் சிவ பெருமான் திருச்சிற்றம்பலத்தில் திருநடனமாடினுர் என் ருல் அவரது வலது திருவடி தனுசுராசி பூராட நட் சத்திரத்திலும் அவரது திருமுடி மிதுனத்தில் சந்திரனு டன் திருவாதிரை நட்சத்திரத்திலும், அவரது வலக் கரம் மீன ராசியில் உத்திரட்டாதி நட்சத்திரத்திலும் இடக்கரம் கன்னிராசியில் அத்த நட்சத்திரத்திலுமாகக் காண்பதோடு, பூமி முதலாகிய அண்டசராசரமனைத்தும் உடலாக நின்று கனகசபையிலே நடராஜமூர்த்தியாயும் அம்மையப்பனுக வும் நின்று சகல அடியவர்களும்காணத் திருநடனமாடும் இவ்வேளையில் நாமிருக்கும் பூமாதேவியானவள் பன்னிரு ராசிகளின் வர்ணப்பாவாடையுடன் நிலாக்குடை புடை சூழத், தந்தையாகிய சூரியபகவானைப் பரதநாட்டியப் பவனி வருங்காட்சியை நட்சத்திரங்களும் கிரகாதிபர்களும் தேவுக்களும் பூலோக வாசிகளும் பாதால வாசிகளும் கண்டு களிப்பவர்களாக!

★★

# அஹிம்சை

ஒன்றை ஒன்று வெறுப்பது உலகில் இயற்கையாக இருந்தாலும், ஒன்றை யொன்று நேசிப்பதும் இருப்பதால் தான் உலகம் இன்னும் அழியாதிருக்கின்றது. உலகம் அழியாதிருப்பதற்கு பரஷ்பர அன்பே காரணம். மனிதன் பிறரைக் கெடுத்து ஜீவிக்க முடியாது.

—காந்தி

# விபூதி

ஸ்ரீ .சி. இராமச்சந்திரன்.
விஞ்ஞான ஆலோசகர்
பூனுநகர்:-- இந்திய அரசு

(நவம்பர் 30, 1969: பகவான் சஞ்சிகையிலிருந்து எடுத்தது)

தமிழாக்கம்:— ம. சி. சிதம்பரம்பிள்ளை.

---

விஞ்ஞானத்தின் எல்லை முடிவில் சமயம் ஆரம்பமாகின்றது. சமயம், விஞ்ஞானத்தின் சகல எல்லைகளையும் கடந்து நிற்கின்றது. ஸ்ரீ சத்ய சாயி பகவானின் அருட் சமுத்திரத்தின் கரையில் இருக்கும் பாக்கியம் அடியேனுக்கு வாய்க்கு முன்பு, உலகின் கண்ணுள்ள சடப்பொருட்கள் யாவும் ரசாயன அடிப்படையில் தோன்றுவன என்ற கொள்கை உடையவனுகவிருந்தேன். தப்பான இந்த எண்ணத்தை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்கள் சிருட்டிக்கும், பிரதானமாக, விபூதியை நேரில் கண்டு களித்த பின்பு, எனது அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டேன்.

எனது இல்லத்தில் வைத்துப் பூஜிக்கும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சுவாமிகளுடைய திருவுருவப் படத்திலிருந்து பாட்டம் பாட்டமாகச் சொரியும் விபூதியைக் கண்டு கண்குளிரக் களித்த பின்பு, பகவான்பால், தாய்பின் செல்லும் கன்றுக்குட்டி போலானேன். அடியேன் ஒரு அசைக்க முடியாத பௌதீக மாணவனுக ஆக்கப்பட்டவனுகையினுல், இந்தப் புதுமையைப்பற்றி பலவித ஆராய்ச்சிகள் நடத்தினேன். ஈற்றில் படுதோல்வி கண்டேன்.

சுவாமி அவர்களின் திருவுருவப்படத்தைத் தாங்கியிருந்த மட்டை, சட்டம், கண்ணுடி முதலிய யாவையும் அகற்றிவிட்டு, வேறு மட்டை, சட்டம், கண்ணுடி போட்டு மாட்டிய பின்பும், என்னே இறையருளின் அதிசயம்! விபூதி

சொரிந்த வண்ணமாகவே இருந்தது. எனது விஞ்ஞான அறையில் எவ்வாறு சோதனைக்குரிய கருவிகள், பொருட்கள் எங்கள் கண் முன்னே எவ்வாறு உருமாறி வேறாக வருகின்றனவோ, அதே விதமாக, பகவானுடைய திருவுருவப் படத்தின் பல பாகங்களிலிருந்தும், கவினைத்தரும் திருநீறு சொறிவதனைக் கண்டு களிக்கின்றேன்.

பகவானிடமிருந்து பெறும் பெரிய வெகுமதிகளில், உலகிற் சிறந்ததும் விலைமதிக்க முடியாததும் புனிதம் நிறைந்ததும், விபூதிப் பிரசாதமே. இதனைப் பூசி அல்லது விபூதி என்று பெயரிடப் பட்டதின் கருத்தும் அதனை அணிபவர்கட்கு சகல சம்பத்தையும் வாரி வழங்கக் கூடியதும், என்பதனால்,

'சுந்தரமாவது நீறு, எனவும்,
போதந் தருவது நீறு, எனவும்,
முத்தி தருவது நீறு, எனவும்,
பேணி அணிபவர்க் கெல்லாம்
பெருமை கொடுப்பது நீறு, எனவும்,
பூச இனியது நீறு, எனவும்,
பெருந் தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கொடுப்பது நீறு, எனவும்'

ஞானசம்பந்தருண்ட ஆளுடைப்பிள்ளை திருவாய் மலர்ந்ததை நினைவூட்டுதல் நன்று. (எடுத்துக்காட்டு எமது)

பஸ்பம் (Bhasma) பாவங்களை நீறாக்குகின்றது. பஸிற்றம் (Bhasitam) ஆத்மீக ஒளியைச் சுடர்விடச் செய்கின்றது ஸ்ராம் (Ksharam) அபாயத்தை அகற்றுகின்றது. ரக்க்ஷக (Raksha) துர்நடத்தையுள்ள பிசாசுகளின் கெடுபிடிகளினால் தாக்கப்படாமல் தப்புவதற்கு ஒரு அரணாக விருக்கின்றது. தேகம் அநித்தியம் என்பதனையும் முடிவில் ஒரு பிடி சாம்பலாக இத்தேகம் மாறிவிடும் என்பதனை விபூதி காட்டுகின்றது.

'முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னுமிந்தப்

படிசார்ந்த வாழ்வை நாம் உய்ய வேண்டுமென்றே
அறியாதவறில்லையே'
(பட்டினத்தடிகள் எடுத்துக்காட்டு எமது)

ஆயிரக் கணக்கான பக்தகோடிகள் பகவானின் இந்த, விஞ்ஞானத்திற்கப்பாற் பட்டதும், சொற்களுக் கப்பாற் பட்டதுமான அதியற்புத லீலையை நேரே கண்டு பெரு மகிழ்ச்சி எய்துகின்றனர். இந்த லீலா விநோதத்தை பக வான், ஒரு வித ஆடம்பரமும் இல்லாமல், இயற்கையாக வும் ஒரு வித அழகுடனும் புரிகின்ருர். பகவான் தனது வலது உள்ளங்கையை நேரே நீட்டி அல்லது ஒரு கோணத் தில் திருப்பி, மென்மையாக ஒருமுறை அல்லது இருமுறை அசைத்ததும், தமது ஆத்ம சக்தியினுல் பஞ்ச பூதங்களி லிருந்து வரும் திவ்ய விபூதியை தமது விரல்களை ஒன்று குவித்து ஏந்தித் தருகின்ருர். இதுவரையில் சொரிந்த விபூதி பல பல அந்தர்க் கணக்காகிவிட்டன. பகவானின் அடியார்கள் இவ்விபூதிக்கு 'கைலாச விபூதி' எனப் பெய ரிட்டு அழைக்கின்ருர்கள். பகவானிடம் இருந்து பெறும் விபூதிப்பிரசாதத்தை பக்தகோடிகள் மிகவும் தீவிர பக்தி யுடன் பேணி, நெற்றியிலணிகின்றனர்; நாவிலிடுகின்ற னர்; நீரிலும் கலந்து தங்களுக்கு நேர்ந்த நோய்கள் தீர்க் கும் பொருட்டு உண்கின்றனர். இதனை ஓர் கவசமாகவும் அணிகின்றனர்.

பகவான் தருவிக்கும் விபூதியும் சந்தர்ப்பங்களுக்கேற்ற வாறு மாறுபட்டதாக விருக்கும். சிலவேளைகளில் விபூதி ஒரு கலசத்துடன் தருவிக்கின்ருர். பகவானின் ஆசியுடன் தரப்படும் இக்கலசத்தில் உள்ள விபூதி, மணிமேகலா தெய் வத்தின் பிட்சாபாத்திரம் போன்று, எடுக்க எடுக்கக் குறை யாத தன்மையுள்ளதாக இருக்கும்.

சில சந்தர்ப்பங்களில் விபூதி மயமாகவே பகவான் எழுந் தருளிக் காட்சி தருவார். அவ்வேளைகளில் விபூதி பகவானின் திருக்கண்ணிமைகளிலிருந்தும் கண்ணங்களிலிருந்தும், நெற் றியிலிருந்தும் சொரிவதனைக் கண்டு களிக்கலாம். பகவானின்

ஆசீர்வாதத்துடன் அடியார்களுக்கு, கனவிலும் விபூதி அளித்து அருளியுள்ளார்கள். உலகில் பலபாகங்ளிலுமிருக்கும் அடியார்கள், தங்கள் பூசை அறையில் வைத்துப் பூஜித்து வழிபடும் பகவானின் திருவுருவப் படத்தைத் தாங்கும் படங்களிலிருந்து இக்கட்டுரை ஆசிரியருடைய இல்லத்திலுள்ள பகவானின் திருவுருவப் படமுமுட்பட, திவ்ய விபூதி சொரிவதனைத் தினமும் கண்டு தெய்வ நம்பிக்கையில் திளைத்து நிற்கின்றார்கள்.

பிரசாந்தி நிலையத்தில் வெள்ளியினால் ஆக்கப்பட்ட சிறிடி சாயிபாபா அவர்களது திருவுருவத்துக்கு பகவான் ஸ்ரீ சத்யசாயி சுவாமிகள், கங்காளன் பூசும் கவசத் திருநீற்றினால் அன்புடன் அபிடேகம் செய்யும் காட்சி ஓர் கண் கொள்ளாக் காட்சியாகும்.

பகவானுடைய முந்திய திரு அவதாரத்தில் சிறிடியில் அக்கினிக் குண்டத்திலிருந்து தவிக்கும் திருநீற்றினால் அடியார்களுக்கு அநுக்கிரகம் செய்து வந்துள்ளார்கள். இன்றும் பிரசாந்தி நிலையத்தில், என்றும் அணையாத வகையாக, திவ்விய அக்கினிக் குண்டம் இருந்து வருகின்றது.

''திருநீறிட்டார் கெட்டார்''
''நீறில்லா நெற்றி பாழ்''
''.............. வெண்ணீறு''
அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம்
அஞ்சும் ஆறே''

ஸ்ரீ பகவான் சத்ய சாயிபாபா சுவாமிகள் திருவடி சரணம்.

★★

'தீமையை எதிர்க்காதே' என்னும் கிரிஷ்துவ வேத வாக்கியத்திற்கு 'தீமையைத் தீமையால் எதிர்க்காமல் நன்மையால் எதிர்க்க வேண்டும் என்பதே பொருள்.

—காந்தி

# "சத்தியசீலர் பாபுஜீ"

கே. தவமணியம்மாள்.

உண்மையும், சத்தியமும் உறுதுணை எனக் கொண்ட காந்திஜீயை நூறு வருடத்திற்கு மேலும் சிந்திக்கும் சிறப்பு சிறுவர் முதல் முதியோர் வரையிலும் ஏற்பட்டது ஏன்? இது மிக மிக முக்கியமான கேள்வி.

''நல்லாரை நாவில் உரை என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியிருக்கிறுர் மகாத்மா. குழந்தைப் பருவத்திலிருந்தே சத்தியம் அவருடைய பிஞ்சு மனதில் இடம்பெற்று விட்டது என அறிகின்றோம்.''

எனக்கு சுமார் ஏழு வயதிருக்கும். அச்சமயத்தில் ஒரு நாடகக் குழுவினர் நடத்திவந்த நாடகத்தைப் பார்க்க என் தந்தையாரின் அநுமதி பெற்றேன். 'அரிச்சந்திரன்' எனும் இந்நாடகம் என் உளளத்தைக் கொள்ளை கொண்டது. எத்தனை தடவை அதைப் பார்த்தாலும் சலிப்புத் தட்டாது. ஆனல், அதைப் போய்ப் பார்க்க எத்தனை தடவைதான் அனுமதிப்பார்கள். ஆயினும் அது சதா என் நினைவில் வந்து நின்றது. எண்ணற்ற சமயங்களில் எனக்குள் நானே அரிச்சந்திரனுக நடித்திருப்பேன். அரிச்சந்திரனைப் போல் ஏன்? எல்லோரும் சத்திய சீலர்களாக ஆகக் கூடாது என்று அல்லும் பகலும் என்னை நானே கேட்டுக் கொள்ளுவேன். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதும் அதற்காக அரிச்சந்திரன் அநுபவித்த துன்பங்களை யெல்லாம் அநுபவிப்பதுமாகிய லட்சியமே ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியது என்ற தமது இளமைப் பருவ நினைவை நமக்கு ஞாபகமூட்டுவதாயிருக்கின்றது.

லட்சத்தில், கோடியில் ஒருவர்தானே இவ்விதம் தோன்றி மறைந்தார்களென்பதை சரித்திரம் கூறுகிறது. அன்பு, அஹிம்சை, சத்தியம், ஆகிய நற்பண்புகள் இளமையிலேயே அரும்பாகி மலர வேண்டும். அதுதான மனிதர் களைஉன்னத நிலைக்குக் கொண்டுவரும். இத்தகைய அறிவுச் செல்வங்களை அநுசரித்து நடக்காதவர்களை மனித குலத்தின் மாணிக்கங்களாக வகுக்க முடியாதல்லவா?

மகாத்மாவைப்போன்ற புண்ணிய புருஷரின் அரிய சாதனைகள் எண்ணற்றவை. சத்திய சோதனையில் அவர் இளமையில் செய்த குறைநிறைகளை ஒளிவு மறைவின்றி மக்கள் உணரும்படி குறிப்பிட்டிருக்கிறார்.

அண்ணல் காந்தியின் இதயத்தில் இளமையிலேயே பதிந்துள்ள பிறிதொரு விஷயமும் குறிப்பிடத்தக்கது. அதாவது 'சிரவணனின் பிதிர் பக்தி நாடகம்' இது சிரவணன் பெற்றோரிடம் கொண்டிருந்த பக்தியைப் பற்றிய நாடகம் என்ற புத்தகம் தந்தையாருடையது. அதை ஆவலோடு படித்துக் கொண்டிருந்த சமயத்தில் அதே நாடகத்தை அவர் பார்க்க வேண்டிய நேரமும் ஒருமித்தமையால் படத்தில் கண்ணிழந்த தன்னுடைய தாய் தந்தையரைச் சிரவணன் கூடையில் வைத்துக் காவடியாகத் தோலில் சுமந்து கொண்டு போனதும், புத்தக விஷயமும், படத்தின் நிகழ்ச்சியும் அவரின் மனதில் அழியாத முத்திரையாகி அவர் பின்பற்றுவதற்கு இது உதாரணமாகத் தோன்றியது.

சிரவணன் இறந்ததால் புத்திர சோகத்தோடு பெற்றோர் வருந்திப் பிரலாபித்து பாபுஜியின் நினைவில் நீங்காமல் சோக கீதம் பாடியதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

தந்தை எவ்வழியோ அவ்வழிப் பிள்ளை என்பார்கள் அதேபோல் மகாத்மாவின் தந்தை 'கரம் சந்திர உத்தம சந்திர காந்தி' என்பவரும் சத்திய சீலர்தான் அவரது பிள்ளை அவரைப் பின்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கந்த ஷஷ்டி

(ஆத்மநாதசர்மா)

—சென்ற இதழ் தொடர்ச்சி—

இப்படிக் கருத்து விளக்கம் கொள்ள என்ன பிரமாணம் என்ற கேள்வி எழும். ஆம். தேவி பாகவதம் ஒன்பதாவது ஸ்கந்தம் நாற்பத்திஆரும் அத்தயாயத்தில் நுழைந்து பார்ப்போம்.

ஸ்வயம்பு மனுவின் மைந்தன் பிரியவிருதன் புலனடக்கம் கொண்டு இல்லற வாழ்க்கையை வெறுத்து எப்பொழுதும் தவத்தில் ஈடுபட்டிருந்தான். அவனுடைய தவத்தை மாற்றி இல்லறத்திலீடு படுத்துமாறு பிரம்மா கட்டளை இட்டார். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு மாலினி என்ற பெண்ணை மணந்து இல்லற தர்மத்தை சிறப்பாக நடத்தி வந்தான். நெடுங்காலமாயும் பிதிர் கடனைத் தீர்க்க சந்ததியைப் பெற்ருனில்லை. அவன் துயரத்தை உணர்ந்த கச்சியபமுனிவர் நல்ல ஒரு மைந்தன் பிறக்க வேள்வி ஒன்றைச் செய்வித்தார். அந்த வேள்வியில் அவிர் பாகமாக அளித்த உணவில் எஞ்சியதை உண்ணச் செய்தார். இறைவனருளால் மாலினி கருவுற்ருள். உரிய காலத்தில் பொன் நிறமும், மன்மதனைப் பழிக்கும் அழகும், நல்ல உடற்கட்டும் பொருந்திய மகனைப் பெற்ருள். தாயும் தந்தையும் சுற்றமும் துயரக் கடலில் மூழ்கினர். ஏன்? குழந்தை அசையவில்லை. சடமாக இருந்தது. எவ்வளவு அழகு இருந்தாலும் உயிரற்ற ஜடத்தைக்கண்டு மகிழ்வாரும் உண்டோ! தந்தை தாங்க முடியாத துயர்கொண்டு மைந்தனை மார்பில் அணைத்துக்கொண்டு மயானம் சென்று கதறினர். முடிவில் தன் உயிரையும் தியாகம் செய்யக் கருதினர்.

அவ்வமயம் ஆகாச வெளியில் பளிங்குக் கல்போல தூய வெண்மை நிறம் வாய்ந்ததும், ரத்தினக் கற்கள் பதிப்பிக்கப்பட்டதும், மலர்மாலைகளால் அலங்கரிக்கப் பட்டதும், கண்ணைக்கவரும் பல காட்சிகள் அமைந்தது மான ஒருவிமானத்தைக் கண்டார். சண்பகப் பூப்போன்ற நிறமும் என்றும் குன்றாத இளமையும், புன்சிரிப்பு தவழும் தெளிந்த முகமும் உள்ளத்தைக் கவரும் மேனி அழகும், அடியவர்களுக்கு அருள்செய்யும் கோலமும் பொருந்திய தேவியைக்கண்டார். மயிர்க் கூச்சலுற்றார். மைந்தனை நிலத்தில் கிடத்தினார். எட்டு அங்கமும் நிலத்திலேபட விழுந்து வணங்கினார். தாயே! நீ யாரம்மா? யாருடைய தேவி நீங்கள்? யார்பெற்ற ரத்தினம் என்று அடுக்காக வினவினார். தேவி கூறினாள்,

'பிரமணோ மானஸீ கன்யா தேவஸேனாஹமீ சுவரீ ஸிருஷ்ட்வாமம் மநஸா தாதா? தௌஸ் கந்தாய பூமிப! மாதிருகாஸு சலிக்யாதா ஸ்கந்த பார்யாசா ஸுவீரதா விசுவே ஷஷ்டீதிலிக்யாதா ஷஷ்டாம் சாபிரகிருதே; பரா'.

**இதன் கருத்து:-** மன்னவ பிர்மாவின் மன எண்ணத்திலிருந்து தோன்றியவள் நான். தேவஸேனை என்று அழைப்பார்கள். என்னை பிர்மா மனதால் படைத்து கந்தனுக்கு அர்ப்பணித்தார். சக்திகளுள் நானும் ஒருவள். கந்தன் பார்யை என்று புகழ் பெற்றவள். ஆதிமாயா சக்தியின் ஆறிலொருபாகம் அம்சம் பொருந்தியவள். என்று மேலும் கூறினாள்.

மக்கள் செல்வத்தை அளிப்பவள் நான். இன்பம், துன்பம், பயதுக்கம், ஆனந்தம் மங்களம், சம்பத் விபத் முதலியவை அவரவர் செய்யும் கர்ம வினைகளால் நிகழுகின்றன. ஒருவனுக்குப் பல பிள்ளைகள், ஒருவனுக்குப் பிள்ளைகளே இல்லை. ஒருவனுக்குப் பிள்ளை பிறந்தவுடன் இறக்கிறது. மற்றவனுக்கு நீண்ட ஆயுளுடன் வாழுகின்றது. இவையாவும் கரும வினையால் ஏற்படுகின்றது. என்னை ஆராதித்தால் அவ்வினை நீங்கி நல்வாழ்வைப் பெறுவர். என்று கூறி அக்குழந்தையை உயிர்ப்பித்து மன்னனிடம்

அளித்தாள். மன்னன் மகிழ்ச்சியுடன் குழந்தையைப் பெற்று தேவியை ஆராதிக்கும் முறையை அறிந்து, இருப்பிடம் சென்று விதி முறையாக வழிபட்டு, சகல செல்வங்களுடன் வாழ்ந்து வந்தான். அவ்வளவு பெருமை வாய்ந்த ஷஷ்டி என்ற தேவியை வழிபட்டநாள் ஷஷ்டி திதியாகும். சுத்த மாயா ஸ்வரூபிணியாகிய ஷஷ்டீதேவியின் நன்னளில் அசுத்த மாயாஸ்வரூபியான சூரனின் ஆனவத்தை ஒடுக்கி அமரருக்கு பேரானந்த வாழ்வை அளித்தான் கந்தன். ஆக வே கந்தனுக்கு பிரியையாக அமைந்த ஷஷ்டிதிதி, கந்த ஷஷ்டி என்று விளக்கம் காணக் கூடியதாக இருக்கிறது. கில மந்தரத்தில் ஆயுள் ஸூக்தம் என்ற ஒரு பகுதியுண்டு. அதனைக்கூறி ஆயுஷ்ய ஹோமம் செய்வார்கள். குழந்தை யின் ஆயுள் வளர்ச்சியைக்கருதி செய்யப்படும் ஹோம மாகும். அதில் ஒரு மந்திரம்,

'ஷஷ்டீம் சயாம் இந்திரஸேனு இதி உதாஹீ, எந்த ஷஷ்டீ' என்ற தேவதையை இந்திரனுடைய சேனையாக முனிவர்கள் போற்றுகின்றனரோ, அந்த ஷஷ்டி தேவதை யை அவிர்பாகத்தால் திருப்திப் படுத்துகின்றோம். குழந் தைக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தருளட்டும் என்று பிரார்த்திப்பதாகும். இங்கு தேவஸேனை என்று குறிப்பிட் டது, அமரருக்கும், அசுரருக்கும் போர் நிகழும் காலத் தில் ஷஷ்டீ தேவதை அமரர் படையில் அதிஷ்டித்து நின்று அசுரரை வென்று அமரரை வாழச் செய்வதால் தேவ ஸேனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் (ஷஷ்டி அப்த பூர்த்தி விழாவில்) அறுபது வயது நிறைவு விழாக் கொண்டாட்டத்தில் இந்த ஷஷ்டி தேவதையை சிறப்பா கக் கொண்டாடும் முறை இப்பொழுதும் காணப்படு கின்றது. அறுபது ஆண்டு நீண்ட ஆயுளைத் தந்தருளினுய், இன்னும் மேலும் பூர்ண ஆயுளைக் கொடுத்து நோயற்ற சுக வாழ்வைத் தந்து, மனிதப்பிறவியின் நற்பயனை அடை யச் செய்வாய், என்று பிரார்த்திப்பதே அவ்வழிபாட்டின் குறிக்கோளாகும். இத்துனை பெருமைவாய்ந்த கந்த ஷஷ்டி தினத்தில் தேவசேனை வள்ளியம்மை சமேத கந்தப்பெரு மானை கருத்தில் கொண்டு வணங்கி செல்வம், ஆயுள், இன்பம், புகழ், சிவஞானம் இவைகளைப் பெறுவோமாக.

கந்தன் துணையுண்டு.

ஒரு கொம் பிருசெவிமுன் றேமத நால்வாய்
தருமைங் கரன்துணையே தாள்.

# நாம்யார்?
## எங்கிருந்து வந்தோம்?
## என்ன செய்கிறோம்?
## எங்கே போகிறோம்?

**இப்படியாக நாம் எப்போதாவது சிந்தித்திருக்கின்றோமா? அப்படிச் சிந்திக்கத்தான் வேண்டுமா? இப்படி யெல்லாம் குடைந்து எமது மூளையைக் குழப்பி ஆராயவேண்டியது அவசியம்தானா? ஆம்.**

— க. வை. ஆ. சர்மா ÷

நாம் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள்; மிருக இயல்பைக் கடந்தவர்கள். சிந்தனைச் செல்வம் உடைமையே எமது சிறப்பு இயல்பு. அதனைப் பயன் படுத்தி வாழாவிட்டால் மிருகங்களுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்.

மிருகங்களை மனிதன் அடக்கி ஆள்கிறான். எதனால்? தனது சிறந்த பகுத்தறிவினால். அப்படிப்பட்ட மனிதனே தன்னைப்பற்றி, தனது வாழ்வு முறையைப்பற்றி, தனது கடமையைப்பற்றி ஆராய்ந்து உணர்ந்து அதன்படி யமையாமல், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழத் தலைபடுவானாயின் மனிதமாண்பு என்னாவது? அது ஒரு போதும் அமையாது.

ஆன்மா என்பது உயிர். உயிர்களைப் பசுக்கள் என்றும் சொல்லுவர். பசுக்களைப் பந்தித்திருப்பது பாசம். பாசம் என்பது பற்று, ஆசை, மலம், அழுக்கு கயிறு, என அது பலபட விரித்துச் சொல்லப்படுவது. ஆன்மா

தூயது. அதாவது தான் எதனைச்சாருகிறதோ அதன் வண்ணத்தை ஏற்றுக்கொண்டு காட்டும் பளிங்குக் கண்ணுடி போன்றது.

தூயதான ஆன்மா பாசத்தினுலே, பற்றினுலே உடல்களை எடுக்கின்றன. எடுக்கின்றன என்று சொல்வதிலும் பார்க்க, ஏற்கின்றன என்று சொல்லுவதே பொருத்தமாகும். ஏனெனில், எல்லா ஆன்மாக்களும் தாம் விரும்பியபடி உடலை எடுக்க முடியவில்லை. மேலும், ஆன்மாக்கள் சும்மா இருப்பதில்லை. அவை நல்ல செயல்களையேனும், தீய செயல்களையேனும், இரண்டுமல்லாத வெறுஞ் செயல்களை யேனுஞ் செய்து கொண்டே இருக்கின்றன. அவை முறையே நல்வினை, தீவினை, வெறுவினை எனச்சொல்லப்படும்.

அந்த அந்த ஆன்மாக்கள் செய்த வினைகளின் பயன் அந்த அந்த உயிர்களால் அனுபவித்தே தீரவேண்டும். எந்த வினையின் பயன் முதலில் அனுபவிக்க வேண்டும், எந்த வினையின் பயன் பின்பு அனுபவிக்கவேண்டும் என்று அறிவது முற்றறிவு, பூரண ஞானம்,

அந்த முற்றறிவை ஆன்மாக்கள் பெறுவதில்லை. அவை சிற்றறிவையே உடையன. அதாவது ஓர் எல்லைக்கு உட்பட்ட ஒடுங்கிய அறிவையே உயிர்கள் கொண்டுள்ளன. அறிவிக்க அறியும் இயல்புடையனவே ஆன்மாக்கள். ஆகவே, பரந்த அறிவு, முற்றறிவு உடைய ஒருவர் ஆன்மாக்களை வழிநடத்த வேண்டும். அப்படியாக ஆன்மாக்களை வழிநடத்துபவரே பதி. அவரைக் கடவுள் என்றே, இறைவன் என்றே, பரமான்மா என்றே எந்தபெயராலும் குறிப்பிடலாம்.

பதியினிடமிருந்து பசுவைப் பிரிப்பது பாசம். பதியோடு சேரவொட்டாமல் பசுவைத் தடுத்து நிற்பதும் பாசம். பக்குவமடைந்த பசுக்கள் பதியைச் சென்றடைவதற்குத் தான் தடையாக இராமல் பிரிந்து நிற்பதும் பாசம்.

எமது முதல் இரு வினுக்களுக்கும் விடை கிடைத்திருக் கிறது. அதாவது, நாம் பசுக்கள், ஆன்மாக்கள், நாம் பதி யினிடமிருந்து பிரிந்து வந்துள்ளோம்.. என்பது.

அடுத்த இரு விஞுக்களும் என்ன செய்கிறோம்? எங்கே போகிறோம்? என்பன. இவற்றிற்கு விடை காண்பது அவ் வளவு இலகுவானது அல்ல. பிறருக்கு உதவி செய்யப் பிறந்தவனே மனிதன். இன்னது செய்தால் இன்னது வரும் என அறியும் வன்மை படைத்தவன் மனிதன். அந்த அறிவே பகுத்தறிவு எனப்படுகிறது. அதன் உதவி கொண்டு நாம் முதலில் பிறருக்குத் தீங்கு நேராமல் வா ழப் பயிலுதல் வேண்டும். அடுத்தபடியாக எம்மால் இயன்ற உதவியைப் பிறர் வேண்டும்போது செய்ய முற் பட வேண்டும்.

மூன்ருவதாகப் பிறருக்குவரும் துன்பங்கண்டு, நாம் அவர் பொருட்டு இரங்கி, நீதி நெறி முரண்படாமல் குறிப் பறிந்து நாமாகவலிந்து உதவிபுரிய முயலவேண்டும்.

நான்காவதாக மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் செய்து முடிக்கவேண்டிய கடன்கள் இருக்கின்றன. ஆன் மாக்களாகிய நாம் இயல்பாகவே தூய்மையுடையோம். ஆயினும், பற்று, ஆசை, என்ற அழுக்கு மலம் எம்மை வந்து பற்றியமையால் இவ்வுடலை ஏற்றுக் கொண்டோம். அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு நெறி முறையான இல்லறம் அனுட்டிக்கப்படுதல் வேண்டும். ஆனுல், நம்மை, ஆன்மா வின் தூய்மையை, மறந்து, நாம் இல்லறமே நிலையானது என ஏமாந்து அதிலே மூழ்கி விடலாகாது. இந்த உடலை நாம் பெற்ற கடன் அவ்வாறு தீர்க்கப்படல் வேண்டும். இதனைக் குறிப்பிடவே,

'இல்லற மல்லது நல்லற மன்று' என ஔவை
மூதாட்டியாரும்;

'இல்வாழ்வா னென்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை' என்று வள்ளுவ பெருந்தகை யாரும் கூறிவைத்தனர்.

(தொடரும்)

# ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | திருப்புகழ் பூஜாமலர் | .50 |
| 2 | சமரச ஞானக் கோவை - க. இராமச்சந்திரா | 5.00 |
| 3 | ஆத்மநாதம் - மகரிஷி சுத்தானந்தர் | 3.00 |
| 4 | தீங்கனிச் சோலை - பரமஹம்சதாசன் | 2.50 |
| 5 | சைவ இலக்கிய கதா மஞ்சரி - அருணாசல தேசிகர் | 3.00 |
| 6 | பாட்டாளி பாட்டு - மகரிஷி சுத்தானந்தர் | 1.50 |
| 7 | இளங்கோவின் கனவு - நடராஜன் | 2.25 |
| 8 | ஆத்மஜோதி மலர் | 1.00 |
| 9 | நவராத்திரிப் பாடல் | .50 |
| 10 | கந்தரனுபூதி | .15 |
| 11 | கந்த சஷ்டி கவசம் | .15 |
| 12 | நித்திய கரும விதி | .25 |
| 13 | செல்லச் சந்நிதி பாடல் | .15 |
| 14 | கதிர்காமப் பதிகம் | .25 |
| 15 | மார்கழி மாதப் பாடல் | .20 |
| 16 | பித்துக்குளி முருகதாஸ் பாடல் | .50 |
| 17 | திருநீற்றின் பெருமை | .10 |
| 18 | தருமம் | .20 |
| 19 | சிவானந்தரின் அருளுரைகள் | .60 |
| 20 | இவ்வாறு அருள்கிறார் சிவானந்தர் | .75 |
| 21 | பக்தி | .20 |
| 22 | பௌத்தம் | .20 |
| 23 | பிரமம் | .20 |
| 24 | அவதாரம் | .20 |
| 25 | முக்கிய உபநிஷதங்களின் சாரம் - பாகம் 1-10 | 2.50 |
| 26 | சுவேதாசுவத உபநிஷத விளக்கம் | .50 |
| 27 | சண்முககவசம் | .50 |
| 28 | சகல கலாவல்லி மாலை | .25 |
| 29 | மதுபானம் விளைவிக்கும் மகா நாசம் | 1.00 |
| 30 | ஸ்ரீ சத்ய சாயி கீதம் | 1.00 |

தபாற்செலவுதனி.

வியாபாரிகட்குத் தகுந்த கமிஷன் உண்டு.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி. (இலங்கை)

Registered a t the G.P.O. as a Newspaper M. L. 59/300

# சந்தா நேயர்களுக்கு!

அன்புடையீர்!

இறைவன் திருவருளால் ஆத்மஜோதிக்கு 21 ஆண்டுகள் பூர்த்தியாகி 22வது ஆண்டு ஆரம்பமாகி 3-வது இதழ் வெளிவந்துள்ளது. பல சந்தா நேயர்களுடைய ஆதரவினாலேயே ஜோதி மாதந்தோறும் சுடர்விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. வழக்கம்போல் அன்பர்கள் அனைவரும் இவ்வாண்டுச் சந்தாவை அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம் சந்தா நேயர்கள் தமது சந்தா இலக்கங்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

# ஆத்மஜோதி நிலையம்,

## நாவலப்பிட்டி, (இலங்கை)

## சந்தா அதிகரிப்பு

பத்திரிகைக் காகித விலை அதிகரிப்பை முன்னிட்டு நிகழும் கார்த்திகை திங்கள் முதல் 'ஆத்மஜோதி' ஆண்டுச் சந்தா ஐந்து ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை அன்பர்களுக்குத் தெரிவிக்கின்றோம் சந்தா நேயர்களும் மற்றும் அன்பர்களும் புதிய சந்தா அதிகரிப்பைக் கவனித்து அனுப்புமாறு வேண்டுகிறோம்.

அச்சிடுவிப்போர்: ஆத்மஜோதி நிலையத்தினர்
அச்சிடுவோர்: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்
வெளியிட்ட திகதி: 14-1-70